**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(குற்ற விசாரணை முறைச் சட்டம் 154 இன் கீழ்)

C 8213043

1. District / மாவட்டம்: நாமக்கல் | P.S. / காவல்நிலையம்: ஊ.த.க.ப.பி | Year / ஆண்டு: 2023 | FIR No. / மு.த.அ. எண்: 11/AC/2023 | Date / நாள்: 19.12.23

2. (i) Act / சட்டம்: The Prevention of corruption Act, 1988 as amended in 2018 | Sections / பிரிவுகள்: 7
(ii) Act / சட்டம்: | Sections / பிரிவுகள்:
(iii) Act / சட்டம்: | Sections / பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்
Date from : நாள் முதல்
Date to : நாள் வரை 1) 7.11.2023 சுமார் 15.45 மணி
2) 18.12.2023 சுமார் 10.30 மணி
Time Period : நேர அளவு
Time from : நேரம் முதல்
Time to : நேரம் வரை

(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள்: 19.12.2023
Time : நேரம்: 10.15 மணி

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண்: 19.12.2023 Vol. II
Time : நேரம்: 11.00 மணி

4. Type of Information : Written/ Oral :
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக: கணினியில் தட்டச்சு செய்யப்பட்ட புகார்.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்: சுமார் 3.கி.மீ வடமேற்கு.
Beat Number : முறைக் காவல் எண்
(b) Address : முகவரி: பட்டு வளர்ச்சி துறை, உதவி இயக்குநர் அலுவலகம், நாமக்கல். மாவட்ட ஆட்சியர் அலுவலக ஒருங்கிணைந்த கட்டிடம், நாமக்கல்.
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின் அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர்: S. தெகதீஸ்வரன்
(b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர்: செங்கோட்டையன்.
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு: 42
(d) Nationality : நாட்டினம்
(e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள்
Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில்
(g) Address : முகவரி: த.எண்: 29/8, புச்சக்காடு, தனவேலம்பட்டி அஞ்சல், இராசிபுரம் தாலுக்கா, நாமக்கல் மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
திரு. முத்து பாண்டியன், உதவி இயக்குநர், பட்டுவளர்ச்சித்துறை அலுவலகம், நாமக்கல் மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
இல்லை

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவு போன / சம்பந்தப்பட்ட சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved
களவு போன / சம்பந்தப்பட்ட சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any
பிரேத விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required)
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம் (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்தனுப்பப்படுகிறது

விபரம் தனித் தாளில் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed M. சிபாஷினி Rank கா.து.க. to take up the Investigation / Refused Investigation / transferred to PS ..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ....................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையிட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு. அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையிட்டவர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு [signature]
(11/12/2023)

[signature] 11/12/23.
Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
19.12.2023 at 12.00 மணி.

Name: பெயர் M. சிபாஷினி.
Rank: நிலை .....................No. எண் .........
காவல் துணை கண்காணிப்பாளர்
உ.கு.த.க.பிரிவு, நாமக்கல்.

**நாமக்கல் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.11/AC/2023 u/s 7 of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018-ன்படி பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையின் வரிசை எண்.12-ன் தொடர்ச்சி...**

இன்று 19.12.2023-ஆம் தேதி செவ்வாய்க்கிழமை காலை 10.15 மணிக்கு நாமக்கல் ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணை கண்காணிப்பாளராகிய ஆகிய நான் நிலைய அலுவலில் இருந்த போது, S.தேகதீஸ்வரன், த/பெ.செங்கோட்டையன், க.எண்.29/8. பூச்சக்காடு, கூனவேலம்பட்டி புதூர், இராசிபுரம் தாலுக்கா, நாமக்கல் மாவட்டம் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு பிரிண்ட் எடுக்கப்பட்ட புகாரின் விபரம் பின்வருமாறு:-

அனுப்புதல்: S.தேகதீஸ்வரன், த/பெ.செங்கோட்டையன், க.எண்.29/8. பூச்சக்காடு, கூனவேலம்பட்டி புதூர், இராசிபுரம் தாலுக்கா, நாமக்கல் மாவட்டம். பெறுதல்: உயர்திரு காவல் துணைக் கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை, நாமக்கல் மாவட்டம். ஐயா, நான் கூனவேலம்பட்டியில் குடியிருந்து வருகிறேன். எங்களுக்கு பூர்வீகமாக 4½ ஏக்கர் விவசாய நிலம் உள்ளது. நிலம் எனது அப்பா பெயரில் உள்ளது. நாங்கள் கூட்டு குடும்பமாக உள்ளோம். எனது அப்பா பெயரில் உள்ள நிலத்தில் 2¼ ஏக்கர் அளவு மல்பெரி நடவு செய்து பட்டு பூச்சி வளர்ப்பு தொழில் செய்து வருகிறோம். எனது அப்பா தோட்டத்தை பார்த்துக்கொள்வார், பட்டுபூச்சி வளர்ப்பு, விற்பனை மற்றும் அது தொடர்பான தொழில் நுட்ப வேலைகளை நான் பார்த்துக்கொள்வேன். எங்கள் பகுதி பட்டுவளர்ச்சி துறை அலுவலர் திருமதி.கீதா அவர்கள் கடந்த ஜனவரி மாதம் என்னிடம் புதியதாக மல்பெரி நடவு செய்யும் விவசாயிகளுக்கு மல்பெரி கன்றுகள் வழங்குவதற்கு மல்பெரி நாற்று நடவு செய்ய முடியுமா என்றும், நடவுக்கு செய்யும் செலுவுக்கு ஒரு ஏக்கர் நடவு செய்தால் ரூ.1,20,000/- ரூபாய் மான்யம் கிடைக்கும் என்றும் விற்பனை செய்யும் பணம் உங்களுக்கான லாபம் என்றும் கூறினார். அதன்படி மேலும் ஒரு ஏக்கர் நிலத்தை சரி செய்து மல்பெரி நடவு செய்தோம். அதனை அவ்வப்போது பட்டுவளர்ச்சி துறை அலுவலர்கள் வந்து பார்வையிட்டு எனது அப்பாவுடன் போட்டோ எடுத்துச் சென்றனர். செடிகள் வளர்ந்தவுடன் அந்த மல்பெரி நாற்றுகளை பட்டு வளர்ச்சி துறை அலுவலர்கள் மூலம் நாற்று 2 ரூபாய் வீதம் விற்றுவிட்டோம். பின்னர் பட்டுவளர்ச்சி துறை மூலம் கிடைக்கும் மான்யம் பெறுவதற்கு கடந்த மூன்று மாதம் முன்பு எனது தந்தை

செங்கோட்டையன் பெயரில் மனு பெற்றுச்சென்றார்கள். கடந்த 6.11.2023-ஆம் தேதி எங்கள் பகுதி பட்டுவளர்ச்சி அலுவலர் திருமதி.கீதா என்னிடம், எங்களுக்கு நர்சரி மான்யம் வளங்குவது சம்பந்தமாக நாமக்கல் மாவட்ட பட்டுவளர்ச்சி துறை உதவி இயக்குநர் திரு.முத்துபாண்டியன் அவர்களை நேரில் சென்று பார்க்க சொன்னார். அதன்படி 07.11.2023-ஆம் தேதி மாலை சுமார் 3.45 மணிக்கு நாமக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தின் புதிய கட்டிடத்தில் 2-வது மாடியில் இயங்கி வரும் பட்டுவளர்ச்சி துறை அலுவலகத்திற்கு சென்று உதவி இயக்குநர் திரு.முத்துபாண்டியன் அவர்களை சந்தித்தேன். அப்போது அவர் என்னிடம் உங்களுடைய நர்சரி மானியம் கோப்பு தயாராக உள்ளது. இயக்குநர் அலுவலகத்திற்கு அனுப்ப வேண்டும். உங்களுக்கு கிடைக்கும் மான்யத்தில் 25% கமிசனாக தனக்கு கொடுக்க வேண்டும் என்று கேட்டார். நான் மான்யம் கிடைக்க ஏற்பாடு செய்ங்க என்று சொன்னேன். அவர் சரி இயக்கநருக்கு அனுப்பி பணம் வந்தவுடன் சொல்றேன் வந்துபாருங்க என்று சொன்னார். அதன் பின்னர் கடந்த 15.12.2023-ஆம் தேதி பட்டு வளர்ச்சி அலுவலர் திருமதி.கீதா அவர்கள் எனக்கு போன் செய்து உதவி இயக்குநர் திரு.முத்துபாண்டியன் அவர்களை போய் பார்க்க சோன்னார். அதனால் நான் அன்று மாலை சுமார் 4.00 மணிக்கு நாமக்கல் உதவி இயக்குநர் அலுவலகம் சென்றேன். அவர் அலுவலகத்தில் இல்லை. அலுவலகத்தில் இருந்த அலுவலர் என்ன விபரம் என்று கேட்டார். நான் நர்சரி மான்யம் சம்பந்தமாக பார்க்க வந்ததாக சொன்னேன். உதவி இயக்குநர் அன்று அலுவலகம் வரவில்லை என்றும் திருச்செங்கோடு சென்றுள்ளதாகவும் திங்கட்கிழமை வந்து பாருங்க என்றும் சொன்னார். அதன்படி நேற்று 18.12.2023-ஆம் தேதி மதியம் சுமார் 10.30 மணிக்கு உதவி இயக்குநர் திரு.முத்துபாண்டியன் அவர்களை நாமக்கல்லில் அவரது அலுவலகத்தில் சந்தித்தேன். அப்போது அவர் எனக்கான நர்சரி மான்ய பணம் இயக்குநர் அலுவலகத்தில் இருந்து வந்துவிட்டதாகவும், ஏற்கனவே சொல்லியிருந்தபடி அவருக்கான 25% கமிசன் தர வேண்டும் என்று கேட்டார். நான் நிறைய செலவு செய்துதான் நர்சரி வைத்தேன் என்று சொன்னேன். அதற்கு அவர் எனக்கு நிறைய செலவு இருக்கு அதனால் பணம் கொடுக்க ஏற்பாடு செய்ங்க உங்க மான்யம் இரண்டு நாட்களில் கிடைத்துவிடும் என்று சொன்னார். நான் மீண்டும் கொஞ்சம் குறைத்துக்கொள்ளுங்கள் என்று சொன்னேன். பின்னர் அவர் ரவுண்டாக ரூ.20,000/- கொடுத்துவிடுங்கள் என்றும் தனக்கு பணம் கொடுப்பது குறித்து எங்கள் பகுதி பட்டு வளர்ச்சி அலுவலர்களிடம் சொல்ல வேண்டாம் என்றும் சொன்னார். மேலும்

இன்று 19.12.2023-ஆம் தேதி இராசிபுரம் ஆண்டகலூர் கேட் அலுவலகத்தில் விவசாயிகள் மீட்டிங் உள்ளதாகவும் அங்கு வருவேன் நீங்க என்னுடைய பர்சனல் நெம்பருக்கு போன் செய்ங்க நான் பணத்தை வாங்கிக்கொள்கிறேன் என்றும் அவரது மொபைல் நெம்பர் 9789689911-ஐ எனக்கு கொடுத்துவிட்டு எனது எண்.9994011146 ஐ பெற்றுக்கொண்டார். எங்களுக்கு மல்பெரி நடவு மானியம் கொடுப்பதற்கு நாமக்கல் மாவட்ட பட்டு வளர்ச்சி துறை உதவி இயக்குநர் அவர்களுக்கு லஞ்சமாக ரூ.20,000/- கொடுக்க விருப்பமில்லை. அவர் மீது சட்டபடி நடவடிக்கை எடுக்க கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு (ஒப்பம்/- xxxxxx (S.தேசுதீஸ்வரன்) 19.12.2023.

மேற்கண்ட புகாரினை படித்துப் பார்த்து, புகாரின் உண்மைத் தன்மை குறித்தும், திரு.முத்துப்பாண்டியன், உதவி இயக்குநர், பட்டுவளர்ச்சித்துறை அலுவலகம், நாமக்கல் மாவட்டம் என்பவருக்கும் புகார்தாரருக்கும் தனிப்பட்ட முறையில் முன்விரோதம் உள்ளதா என்பது குறித்தும், எதிரியின் முன் நடவடிக்கை குறித்தும் இரகசிய விசாரணை மேற்கொள்ளப்பட்டதில், எதிரியின் முன் நடத்தை திருப்தியாக இல்லையென்பதும், புகார்தாரருக்கும் எதிரிக்கும் முன்விரோதம் ஏதுமில்லை என்றும், எதிரி மீது குற்ற வழக்கு பதிவு செய்ய போதுமான முகாந்திரம் இருப்பதும், புகார்தாரருடைய புகார் நம்பகத்தன்மை கொண்டது என்பதும் தெரிய வந்ததால், சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை இயக்குநரகத்தில் வாய்மொழியான ஒப்புதல் பெற்று, இன்று 19.12.2023-ஆம் தேதி செவ்வாய்க்கிழமை காலை 11.00 மணிக்கு நாமக்கல் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு குற்ற எண்.11/AC/2023, u/s 7 of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018-ன்படி மேற்படி திரு.முத்துப்பாண்டியன் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது.

பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையின் அசல், புகார்தாரரின் புகார் மனு ஆகியவற்றை மாண்பமை தனிநீதிபதி/தலைமைக் குற்றவியல் நீதித்துறை நடுவர், நாமக்கல் அவர்களுக்கும் மற்ற நகல்களை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பி வைக்கப்படுகிறது.

(M. சுபாஷிணி)
காவல் துணை கண்காணிப்பாளர்,
ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
நாமக்கல்.